மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 95/2017</u>

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோக் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.09.2024 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது தடத்தில் அவருக்கு பாத்தியம் உள்ளதாக வழக்கு போட்டுள்ளார். வழக்கு தடம் ரீ.சர்வே எண்.781/1 ல் உள்ளது. தாவா தடத்துக்கு கிழபுறம் வாதியின் பூமி உள்ளது என்றால் ஆமாம். வாதி நிலத்தின் சர்வே எண்.781/2 என்றால் ஆமாம். வாதியின் பூமி 2 ஏக்கர் 96 சென்ட் விஸ்தீரணம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எனது தடத்திற்கு அளவீடுகள் கண்டு எனது பத்திரத்தில் கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம். அது என்ன ஆவணம் என்றால் 2015 ம் ஆண்டு கிரைய ஆவணம்.

2. எனது மூல ஆவணங்களில் தாவா தடத்தின் அளவீடுகள் கண்டுள்ளது என்றால் அது எனக்கு நிச்சயமாக தெரியவில்லை. நான் அளவீடு கண்டு கிரையம் பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் வாதியின் பூமியை அறிவிப்பு கொடுக்காமல் அளவீடு செய்தேன் என்றால் அறிவிப்பு கொடுத்துதான் அளவீடு செய்தேன். எந்த தேதியில் அளவீடு செய்தேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. நான் வாதிக்கு அறிவிப்பு கொடுத்தற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாய்மொழி அறிவிப்பு தான் கொடுத்தேன்.

3. அளவீடு செய்தபோது தாலுக் சர்வேயர் இருந்தாரா என்றால் ஆமாம். அவரும் வாதிக்கு வாய்மொழியாகத்தான் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் ஆமாம். 781/1 தடம் என வருவாய்த்துறை ஆவணங்களில் கண்டுள்ளதா என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் ரீ.ச.எண்.781/1 தடமாக இருந்திருந்தால் அது குறித்து அ பதிவேட்டில் குறிப்பு பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அது எனக்கு தெளிவாக தெரியவில்லை. நான் எனது முதல் விசாரணையில் பதிவு ஆவணங்களில் தாவா வண்டித்தடம் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றும் அது எந்த ஆவணம் என்றால் 2015 கிரைய ஆவணத்தில் அது கண்டுள்ளது.

4. நாங்கள் கிரையம் பெற்ற ஆவணம் ரீ.சர்வே ஏற்பட்டபின்பு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். எனது மூல ஆவணங்களில் எதிலாவது தாவா வண்டித்தடத்தின் அளவீடுகள் கண்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. மூலப்பத்திரத்தில் இல்லாத நிலையில் மோசடியாக 2015 கிரைய ஆவணத்தில் அளவீடுகள் கண்டு தாவா தடத்தைப் பொறுத்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வேயர் வாதி பூமிக்குள் சென்று அளந்தாரா என்றால் அவர் அளவு பார்ப்பதற்காக உள்ளே சென்றார்.

5. நான் வாதிக்கு முறையாக எழுத்துமூலமாக அறிவிப்பு கொடுக்காமல் வாதியின் நிலத்திற்குள் சென்ற அளவீடு செய்துள்ளோம் என்றால் நாங்கள் வாதியின் பூமிக்குள் வாதிக்கு வாய்மொழியாக அறிவிப்பு கொடுத்து அவர் முன்னிலையில் அளந்தோம். நாங்கள் முறையாக வாதிக்கு எழுத்துமூலமான அறிவிப்பு கொடுக்காததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மூல ஆவணங்களில் வண்டித்தடத்தின் அளவீடுகள் இல்லாத நிலையில் மோசடியாக கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி வாதியின் நிலத்திற்குள் சென்று அளவீடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

6. வாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த தெய்வானை என்பவர் என் தகப்பனாரின் தந்தையின் தங்கை ஆவார். வாதியின் தகப்பனார் சேமலைக்கவுண்டர் கிரையம் பெற்றபோதே வண்டித்தடத்திற்கு கிழக்கு என்று கண்டுதான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் வண்டித்தடத்தின் அளவீடுகள் இல்லாமல் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. எனக்கும், வாதிக்கும் வண்டித்தடத்தின் அளவீடு குறித்து தற்போது பிரச்சனை உள்ளது என்றால் ஆமாம்.

7. வண்டித்தடத்தையும் வாதி பூமியையும் சர்வேயர் மூலம் அளவிட எனக்கு சம்மதமா என்றால் சம்மதம். நான் வாதியின் பூமியை ஆக்கிரமிப்பு செய்து வண்டித்தடம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முறையாக அறிவிப்பு கொடுக்காமல் வாதி பூமியை அளந்து அவருக்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வண்டித்தடத்திற்கு முன்பு வாய்க்கால் பாலம் உள்ளது என்றால் சரிதான். அதில் தண்ணீர் வந்தால் வண்டித்தடத்தின் வழியாக

செல்லும் என்றால் சரிதான். அந்த வண்டித்தடத்தை தடுத்து வாதியின் பூமிக்குள் அதில் வரும் தண்ணீரை தடுத்து வாதியின் பூமிக்கு செல்லுமாறு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.09.10 18:07:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்